உ

சிவமயம்

மிட்டாய்பாட்டு.

குயப்பேட்டை.

வீ. இராஜு முதலியா ரவர்களால்

பார்வையிடப்பட்டு.

பி. நா. சிதம்பரமுதலியார்

பிரதர்ஸ் அவர்களது

சென்னை

வித்தியார த்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

வில்வாதித் தைலம்.

இந்த வில்வாதித்தைலத்தை நாலுவட்டமாவது எட்டுநாளைக்கொருமுறையாவது தலைக்குத்தேய்த்து ஸ்நானஞ்செய்துவந்தால் கைகாலெரிவு, மூத்திரயெரிவு, நீர் துவாரக் கிரிச்சனங்கள், மேகச்சூடு, பித்தச்சூடு, திரேகவனல், உட்காய்ச்சல், வாயில் நீரூரல் முதலியயாவும் தீரும். முதல்தினம் தலைமுழுகும்போது இந்தத் தைலத்தின் குணாதிசயம் தெரிந்துக் கொள்ளலாம். திரேகத்தில் அவ்வளவு குளிர்ச்சியுண்டுபண்ணி கண்கள் ஜில்லென்றிருக்கும்.

ஆழாக்குத் தைலம் அடங்கிய
1-டப்பியின் விலை ரூபா 1 8 0

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்.
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

முருகன் துணை.

நூதன

மிட்டாய்பாட்டு.

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

பேரின்பவீடதனைப் பேணியளிக்குமிட்டாயி
சீரின்பமாமிதனைச் செப்பவே-கோரின்பம்
சித்திதரும்முத்திதரும் செல்வவிநாயகனைப்
பத்தியுடனே தொழுதக்கால்.

சிந்து.

அமிர்தரஞ்சித மிங்கிர்தமிட்டாய்
அன்னமேநீ வாங்குமிட்டாய்
தவமுனிவர் புகழுமிட்டாய்
தையலற்கு யேற்றமிட்டாய் அமிர்த

நாலுவேத மானமிட்டாய்
நல்லபத மளிக்குமிட்டாய்
மேலோர்கள் புகழுமிட்டாய்
மின்னிடையே வாங்குமிட்டாய் அமிர்த

பர்ப்பிதூத்படா ணெக்கல்மிட்டாய்
பதவியளிக்குஞ் சக்கர்மிட்டாய்
குறிப்பறிந்துக் கொள்ளுமிட்டாய்
கோரும்வரங் கொடுக்குமிட்டாய் அமிர்த

அகிலமெலாம் நிறைந்தமிட்டாய்
அறிவையற்கு யேத்தமிட்டாய்
இகபர மளிக்குமிட்டாய்
யேந்திழையே பூந்திமிட்டாய் அமிர்த

இமூர்த்தி சிலேபிமிட்டாய்
இனிமையான லட்டுமிட்டாய்
நம்பியிதைக் கொள்ளுமிட்டாய்
ஙாயகமே தகுந்தமிட்டாய் அமிர்த

அந்தியிலே வாங்குமிட்டாய்
சந்தியிலே திரியுமிட்டாய்
சொந்தமான சுகிர்தமிட்டாய்
பந்தமதை யறுக்குமிட்டாய் அமிர்த

சீனிப்பாக்குச் சிறந்தமிட்டாய்
சித்தரெலாம் புகழுமிட்டாய்
நானுனக்குச்சொன்னமிட்டாய்
நாரிப்பாக மானமிட்டாய் அமிர்த

அப்பர்சுந்தரர் மாணிக்கவாசகர்
அழகுசம்மந்தர் புகழுமிட்டாய்
கற்பகமே யுண்ணுமிட்டாய்
கலியுகத்தோ ரேற்றுமிட்டாய் அமிர்த

மாயவலையை யறுக்குமிட்டாய்
மாரனையுங் காய்ந்தமிட்டாய்
நேயமாகும் நெய்யிமிட்டாய்
நீயேவாங்கும் பெண்ணேமிட்டாய் அமிர்த

மனத்துயரைப் போக்குமிட்டாய்
மங்கைபாக மானமிட்டாய்
சினத்தையுமறுக்கு மிட்டாய்
சித்திரமே வாங்குமிட்டாய் அமிர்த

கண்ணபடர்க் கருளுமிட்டாய்
காட்சியது கொடுக்குமிட்டாய்
உண்ணயுண்ண ருசிக்குமிட்டாய்
உத்தமியே வாங்குமிட்டாய் அமிர்த

பாதுமலுவா பன்னீர்மிட்டாய்
பாவப்பிணியை யறுக்குமிட்டாய்
வேதன்மாலுந் தேடுமிட்டாய்
வஞ்சியே வாங்குமிட்டாய் அமிர்த

திரைமுழுதும் நிறைந்தமிட்டாய்
மறைமுனிவர் புகழுமிட்டாய்
அறிந்தவர்க்கே சிறந்தமிட்டாய்
ஆசைகண்ணே வாங்குமிட்டாய் அமிர்த

மனோரஞ்சித மானமிட்டாய்
மங்கையே பால்கோவாயல்வா
வனமயிலே பூரிமிட்டாய்
வதிரசமே வாங்குமிட்டாய் அமிர்த

முந்திரிபருப்பு அவலுநொக்கல்
மெத்தருசியாஞ் சீனிமிட்டாய்
தொந்தமாகத் தொடருமிட்டாய்
தொடுக்கவச மாகுமிட்டாய் அமிர்த

காராசேவு வோம்பொடி
காரமுள்ள பொகடாதுடி
நேராநெய்யில் செய்தபடி
நேரிழையே வாங்காயடி அமிர்த

நூதன மிட்டாய்ப் பாட்டு. கரு.

மின்னலைப்போலவே ஜொலிக்கும்
மேதினியாசை தனைவிலக்கும்
கன்னியரே தேடகிடைக்கும்
காசியும் வேண்டாநமக்கும் அமிர்த

நிரைவிலை யிலாதமிட்டாய்
நேர்த்தியாங் கற்கண்டுமிட்டாய்
அறிந்தவ ரறிந்தமிட்டாய்
அனேகவித மானமிட்டாய் அமிர்த

கையைவீசி கடைக்குப்போர
கன்னியரே யிந்தமிட்டாய்
மெய்யிலுள்ள பிணியறுக்கும்
மெல்லியரே வாங்குமிட்டாய் அமிர்த

பிரவியறுக்குமிட்டாய்
பூதமைந்து வானமிட்டாய்
அறிவையற்கு மறிந்தவற்கும்
ஆனந்தங் கொடுக்குமிட்டாய் அமிர்த

குணத்தைப் பெருக்குமிட்டாய்
கூட்டுறவு செய்யுமிட்டாய்
பணச்செலவு மில்லாமலே
பாவையரே கிடைக்குமிட்டாய் அமிர்த

பிள்ளைக்கரிக் கேட்டமிட்டாய்
பேரின்ப மளிக்குமிட்டாய்
உள்ளமது களிக்குமிட்டாய்
உமைபாக மானமிட்டாய் அமிர்த
செஞ்சி யேகாம்பரமும்
சிற்றறிவின லுரைத்த
ரஞ்சித மிட்டாய்பாட்டை
வஞ்சியே யுலகறிய அமிர்த

நூதன மிட் டாய்பாட்டு.

முற்றிற்று.